**Minutes of Public Hearing held on 03.01.2023 at 11:00 AM in Hindhu Nadar Thirumana Mandapam, located at Keelasurandai , Veerakeralampudur Taluk Taluk Tenkasi District with respect to the project of M/s. R.Ponkaliraj Rough Stone & Gravel Quarry,– S.F.No. 280/6, Anaikulam Village, Veerakeralampudur Taluk, Tenkasi District**

**Details of participants in this meeting:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Mrs. V. Gangadevi | - | Revenue Divisional Officer, Tenkasi, Tenkasi District. |
| 2. | Mrs.C.Suyambu Thangarani | - | District Environmental Engineer Tirunelveli |
| 3. | Public and Government officials | - | Details are attached(Annexure-1) |

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Revenue Divisional Officer who came to preside over Public hearing and all the people and government officials who were present in the meeting. Then, Tenkasi Revenue Divisional Officer invited the public to give their name and comments one by one after hearing explanation about project by Project Consultant.

Following this, Mr. B. Swaminathan, Project Consultant for the proposed M/s G.Karuppasamy Rough Stone, Jelly & Gravel Quarry explained the project details to the public through Power Point Presentation.

After that, the public began to express their views which are as follows:-

**1. Mr. Anthonisamy, Vadiyur :-**

He informed that he is doing architecture related business, and more than 20 people are working under him. This quarry is needed for all the people in this area who are all doing trading and people of neighbouring village of Anaikulam and Kurichankulam will get the necessary materials for building construction. This area is barren land and there is no environmental issue. The quarry area is 3 to 4 km from vadiyur, therefore, it would be useful if permission is granted to set up a Gravel quarry / Stone quarry here. He also informed that people have to go to Athiyuthu, Alangulam near Adaikalapattinam to buy M.Sand and Gravel. The distance is about 20 to 25 km. If the distance is near 4 KM, the transportation cost will be reduced. He said that this will be useful not only for us but also for the workers in the village to build houses.

**2. Mr. Lurthu Anthony, Vadiyur:-**

He informed that there is no adverse impact due to this quarry. If the quarry comes, 50 people will be get employment and the neighboring villagers will get building materials at a low cost. He said that the construction work will be done in addition, so that the quarry is good for us. And he requested to grant permission for this quarry.

**3. Mr. Murugesan, Kurichanpatti:-**

He informed that this quarry will provide employment to 20 people. People travel to Athiyuthu, Adaikalapattinam, Mukkudal to get M.sand so, that it will be convenient if the quarry is opened here.

**4. Mr. Abraham Nixan, Kurichanpatti :-**

He informed that this quarry is nearer to our Village and he has been working in this quarry for 10 years. This quarry has not been functioning for two years. As a result, 100 families have been affected. The quarry is located in an isolated location at 4 KM on the periphery. There is no harm to anyone. Even a small farm land will not be affected. Hundreds of families depend on this quarry work, because they don't know any other job. They depend this Quarry work so that this quarry must be allowed. No building material is easily available for construction work. It has to be brought from the periphery of 15 KM so that it involves extra cost. Due to non-availability of construction materials on time, there is a situation where people go to work and return to home without work. Gravel, Soil, are not available on time. This quarry is located at a distance of 4 kms so employment will be available. The price of construction materials will be decreased. The price is high due to distant area so that common people are affected. Low income earners are vulnerable to housing. 100 families depend on this quarry. Quarrying has not taken place for two years so that livelihood of peoples has been affected. We rely on wage labour for agricultural work. Quarry work is available to us throughout the year like government job. There are four villages around our village and this quarry is our livelihood and this quarry trade has been functioning for 35 years. There is no damage due to this quarry. Piece of agricultural land is also not affected. He requested the government to give permission to this quarry. If the quarry does not come, our livelihood will be affected. Those who are in construction work will be affected due to non-availability of materials. People in our village and neighboring villages will buy construction materials at a lower cost.

**5. Mr. K. Shamugadurai, Karaiyalanur:-**

He conveyed his thankfulness as the quarry located near his village. 10 to 20 people will get employment. He requested to give permission to this quarry. He also informed that there will be not any adverse effect on agriculture.

**6. Mr. Thiraviyam, Karaiyalanur:-**

He informed that there is no harm to anyone due to this quarry. It is in a forest area and comfortable for business people. Stones have to be brought from outside to build a house. So, that, the price is high. He also informed that due to this quarry stone rate will be decreased, which is useful for everyone. There are no other quarries in the neighboring area. Earlier, there was a Government quarry which has been stopped so permission must be given for this quarry

**7. Mr. S.K.M. Muhammad, Anaikulam:-**

He appreciated that for the proposed quarry in S.F.No. 280/6 in their village. Quarry is opened to serve people, the reason is there are more hamlet villages around it. In hamlets there are small families who can farm on a small scale. Since there are poor families, if they open a quarry, it will provide stone to the poor people and it will be a favorable for them to build houses. He also informed that this quarry will aim at benefitting the poor people and it will be an opportunity for the poor people to build a house with cheaper cost. Any village will not be disturbed by this quarry. Therefore, he requested to grant permission to the quarry without delay.

**8. Tmt. Muthulakshmi. Kulayaneri:-**

She informed that she wants this quarry. She informed that this quarry has no problems so that we need a quarry. she said that we will buy stone from the quarry and hence requested for quarry.

**9. Mr. Mukaiyah, Keelasurandai:-**

He informed that it is convenient for us if the stone available on nearby. If the stone comes from a distance, it will not be affordable for people who have suffered like me, so that requested for the nearby quarry.

At the end, the District Environmental Engineer, Tirunelveli has informed that all the views of the public is recorded and will be sent to Tamil Nadu Government State Level Environmental Impact Assessment Authority through TNPCB, Corporate Office, Chennai and the meeting came to an end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tirunelveli.

Revenue Divisional Officer,
Tenkasi.

(3/3)

தென்காசி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம், ஆனைகுளம் கிராமம், புல எண்: 280/6ல் அமையவுள்ள தி/ள். ஆர். பொன்காளிராஜ் ர/ப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 03.01.2023 அன்று முற்பகல் 11:00 மணியளவில் தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழசுரண்டை கிராமத்தில் அமைந்துள்ள இந்து நாடார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நிகழ்வின் சுருக்கம்:-

இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி. வீ. கங்காதேவி | - | வருவாய் கோட்டாட்சியர், தென்காசி, தென்காசி மாவட்டம். |
| 2. | திருமதி. செ. சுயம்புதங்கராணி | - | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி. |
| 3. | பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் | - | விபரம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 1) |

---000---

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்த வருகை தந்த தென்காசி வருவாய் கோட்டாட்சியர், கலந்து கொள்ள வந்துள்ள பொதுமக்கள், அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்றார். பின்பு பேசிய தென்காசி வருவாய் கோட்டாட்சியர், கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பான பொருள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை, திட்டத்தினைக் குறித்த விளக்கத்தினை திட்ட ஆலோசகர் தெரிவித்தபின் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை தெரிவித்து கருத்துக்களை பதிவு செய்யமாறு கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இத்திட்டம் குறித்த விளக்கங்களை தி/ள்.ஆர். பொன்காளிராஜ் ர/ப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் திட்ட ஆலோசகர், திரு. பி.சுவாமிநாதன் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொது மக்களுக்கு விளக்கினார்.

அதனைத் தொடாந்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடாங்கினார்கள், அவை பின்வருமாறு:-

1. திரு அந்தோணிசாமி, வாடியூர்:-

நான் கட்டிடக்கலை சார்ந்த தொழில் செய்து வருகிறேன். என்னிடம் 20க்கும் மேற்பட்டோர் வேலை செய்கின்றனர். இந்த கல்குவாரி மற்றும் கிராவல் குவாரி எதற்கு தேவை என்றால் இந்த பகுதியில் இருக்கிற அனைத்து மக்களும் வர்த்தக தொழில்

சார்ந்தவர்கள் பக்கத்து கிராமமான ஆனைகுளம், குறிச்சான்குளம் மக்களுக்கு கட்டிடங்களுக்கு தேவையான பொருட்கள் கிடைக்கும். இந்த பகுதி தரிசு நில பூமியாகும் சுற்றுச் சூழல் இடையூறு இருக்காது. வாடியூரில் இருந்து 3 முதல் 4 கீமீ தொலைவில் குவாரி பகுதி உள்ளது. ஆகவே எந்த தங்குதடையின்றி கிராவல் குவாரியும், கல் உடைக்கும் குவாரி அமைக்க உத்தரவு அளித்தால் பயனுள்ளதாக இருக்கும். இங்கு எம்.சாண்ட் மற்றும் கிராவல் வாங்க அடைக்கலபட்டினத்திற்கு அருகில் உள்ள அத்தியூத்து, ஆலங்குளம் செல்லவேண்டியுள்ளது, தூரம் சுமார் 20 முதல் 25 கீமீ உள்ளது. அருகில் 4 கீ.மீ. தொலைவில் இருந்தால் போக்குவரத்து செலவு குறையும். இது எங்களுக்கு மட்டுமில்லாமல் கிராமத்தில் உள்ள சிறு குறு பணியாளர்களுக்கு வீடுகட்ட பயனுள்ளதாக அமையும் என தெரிவித்தார்.

2. திரு. லூர்து அந்தோனி, வாடியூர்:-

இந்த குவாரி அமைவதால் எந்த பாதிப்பும் கிடையாது. குவாரி வந்தால் 50 பேருக்கு வேலைகிடைக்கும் பக்கத்து கிராம மக்களுக்கு குறைந்த விலையில் கட்டிட பொருட்கள் கிடைக்கும். கட்டிடபணி கூடுதலாக நடக்கும் ஆகவே இந்த குவாரி வருவது எங்களுக்கு நன்மையே. எனவே இந்த குவாரிக்கு முழுமனதுடன் அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

3. திரு. முருகேசன், குறிச்சாண்பட்டி:-

இந்த குவாரியில் 20 பேருக்கு வேலைகிடைக்கும். எம்.சாண்ட வாங்க அத்தியூத்து, அடைக்கலபட்டினம், முக்கூடல் செல்ல வேண்டி உள்ளது. எனவே குவாரி திறந்தால் வசதியாக இருக்கும் என தெரிவித்தார்.

4. திரு. ஆபிரகாம் நிக்சன், குறிச்சான்பட்டி:-

இந்த குவாரி எங்கள் ஊரின் அருகாமையில் உள்ளது. நான் இந்த குவாரியில் 10 வருடமாக வேலை பார்த்து வந்தேன். இப்பொழுது இரண்டு வருடமாக இந்த குவாரி செயல்படவில்லை. இதனால் 100 குடும்பத்தினர் வாழ்க்கை தரம் பாதிக்கப்பட்டுள்ளது. நான்கு கீ.மீ. சுற்றளவில் தனிபட்ட இடத்தில் இந்த குவாரி உள்ளது. யாருக்கும் எந்த பாதிப்பும் கிடையாது. ஒரு சிறிய விவசயாய நிலம் கூட பாதிப்படையாது. நூறு குடும்பங்கள் இந்த குவாரி வேலையை நம்பியுள்ளனர். ஏனெனில் எங்களுக்கு வேறு வேலை தெரியாது. குவாரி வேலைதான் எங்களுக்கு பழக்கம். இந்த குவாரியை கண்டிப்பாக அனுமதிக்க வேண்டும். கட்டுமான பணிக்கு எந்த பொருளும் எளிதில் கிடைப்பதில்லை. சுமார் 15 கீ.மீ. சுற்றளவில் இருந்து கொண்டு வரவேண்டியுள்ளது. விலைவாசி கூடுதலாக உள்ளது. கட்டுமான பொருள்கள் குறித்த நேரத்தில் கிடைக்காததால் அங்கு வேலைக்கு சென்று வேலை இல்லாமல் திரும்பிவரும் சூழ்நிலை உள்ளது. ஏற்கனவே குறித்த நேரத்தில் ஜல்லி, மண்,

கிடைப்பதில்லை. இந்த குவாரி 4 கீ.மீ தூரத்தில் உள்ளதால் வேலைவாய்ப்பு கிடைக்கும். கட்டுமான பொருட்களின் விலைவாசி குறையும். தூரமான பகுதிக்கு சென்று வாங்குவதால் விலைவாசி அதிகமாக உள்ளது. இதில் எளிய மக்கள் பாதிப்படைகின்றனர். குறைந்த வருவாய் உள்ளவர்கள் வீடு கட்ட பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இந்த குவாரியை நம்பி 100 குடும்பங்கள் உள்ளது. இரண்டு வருடமாக குவாரி நடக்கவில்லை. இதனால் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது. விவசாயவேலை கூலிவேலையைதான் நம்பி உள்ளோம். குவாரி வேலை எங்களுக்கு வருடம் முழுவதும் விடுமுறையில்லாமல் அரசு பணி மாதிரி கிடைக்கும்.

எங்கள் ஊரைச் சுற்றி நான்கு கிராமம் உள்ளது. எங்களுக்கு வாழ்வாதரமே இந்த குவாரிதான். இந்த குவாரி 35 வருடமாக நடந்து கொண்டு உள்ளது. இதனால் எந்த சிறிய பாதிப்பும் இல்லை. சிறிய விவசாய நிலமும் பாதிப்படையவில்லை. இந்த குவாரிக்கு அரசிடம் தெரிவித்து நீங்கள் அனுமதி அளிக்கவேண்டும் இதை நம்பி 100 குடும்பங்கள் உள்ளது. குவாரி வராவிட்டால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கும். கட்டுமான பணியில் உள்ளவர்கள் பொருட்கள் கிடைக்காமல் பாதிப்படைவார்கள். எங்கள் ஊரில் உள்ளவர்களும் பக்கத்து ஊரில் உள்ளவர்களும் குறைந்த விலையில் கட்டுமான பொருட்களை வாங்குவார்கள் இந்த குவாரியால் பல நன்மைகள் உண்டாகும் வாழ்வாதாரம் உயரும் குவாரிக்கு அனுமதி கிடைக்கும் என நம்புகிறேன் என தெரிவித்தார்.

5. திரு. கே. சண்முகத்துரை, கரையாளானூர்:-

எங்கள் ஊருக்கு அருகில் குவாரி அமைந்ததால் மிக்க நன்றி. எங்களுக்கு 10 முதல் 20 பேருக்கு வேலைகிடைக்கும். இந்த குவாரிக்கு அனுமதி அளிக்கவேண்டும். இந்த குவாரியால் விவசாயத்துக்கு எந்த பாதிப்பும் கிடையாது. இந்த குவாரியால் 10 இருபது பேருக்கு வேலைகிடைக்கும் என தெரிவித்தார்.

6. திரு. திரவியம், கரையாளானூர்:-

இந்த குவாரி வருவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் கிடையாது. இது காட்டு பகுதியில் உள்ளது. தொழில் பாாப்பவர்களுக்கு வசதியாய் இருக்கும். வீடு கட்டுவதற்கு கற்கள் வெளியில் இருந்து கொண்டு வரவேண்டியுள்ளது. இதனால் விலைஅதிகமாக உள்ளது. இந்த குவாரி பக்கத்தில் வருவதால் ஏழை எளிய மக்களுக்கு கல்விலை குறையும். அனைவருக்கும் பயன்படும். பக்கத்து பகுதியில் வேறு குவாரிகள் இல்லை. முதலில் ஒரு அரசு குவாரி இருந்தது. இப்போது நிறுத்தப்பட்டுள்ளது எனவே இந்த குவாரிக்கு கண்டிப்பாக அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவித்தர்.

7. திரு. **S.K.M.** முகமது, ஆணைகுளம்:-

எங்கள் கிராமத்திற்கு உட்பட்ட 280/6 சர்வே எண் கொண்ட கல்குவாரி திறக்க அவர்கள் முன் வந்ததற்கு பாராட்டுகிறோம். மக்களுக்கு சேவை செய்ய குவாரி திறக்கப்பட்டுள்ளது. காரணம் என்னவென்றால் அதனை சுற்றி குக்கிராமங்கள் அதிகமாக உள்ளது. குக்கிராமங்களில் சிறிய அளவில் விவசாயம் பண்ணக்கூடிய சிறுகுடும்பங்கள் உள்ளன. பாவப்பட்ட குடும்பங்கள் உள்ளதால் இவர்கள் கல்குவாரி திறந்தால் ஏழை மக்களுக்கு கல் வழங்கி அவர்கள் வீடு கட்டுவதற்கு சாதகமான அமைப்பாக அமையும் என்பதால் குவாரி திறக்க அனுமதி அளிக்கவேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கல்குவாரியால் பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையும் ஏழை மக்கள் பயன்பெறுவது மற்றும் விலைகுறைவான கல்லால் வீடு கட்டி அதில் ஏழைமக்கள் குடியிருப்பதற்கு வசதியான வாய்ப்பாக அமையும். இந்த கல்குவாரியால் எந்த கிராமத்திற்கும் எவ்வித இடையூரோ, இடைஞ்சலோ இல்லை என தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். எனவே தாமதப்படுத்தாமல் பொன் காளிராஜ் என்பவருக்கு குவாரி உத்திரவு வழங்கவேண்டும் என தெரிவித்தார்.

8. திருமதி.முத்துலெட்சுமி, குலையநேரி:-

எங்களுக்கு இந்த தொழில் வேண்டும். எங்களுக்கு எல்லா பொருட்களும் கிடைக்கும் - வீட்டு வேலைக்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும். குவாரியால் எந்த பிரச்சினையும் இல்லை. எங்களுக்கு குவாரி வேண்டும். என்ன வேண்டுமானாலும் அவசரத்திற்கு அவர்களிடம் வாங்கி கொள்வோம் அதனால் குவாரி வேண்டும் என தெரிவித்தார்.

9.திரு.மூக்கையா, கீழச்சுரண்டை:-

இந்த கல் குவாரியில் நான் லோடு அடித்திருக்கிறேன் பக்கத்தில் கல் இருந்தால் எங்களுக்கு சௌகரியமாக இருக்கும். தூரத்தில் இருந்து கல் வந்தால் என்னை மாதிரி கஷ்டப்பட்ட ஆள்களுக்கு கட்டுப்படி ஆகாது எனவே எங்களுக்கு பக்கத்தில் குவாரி கொடுங்கள் என தெரிவித்தார்

பின்னர் பேசிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு சென்னை வாரிய தலைமை அலுவலகம் மூலம் தமிழக அரசு சுற்றுச்சூழல் துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு செய்யப்பட்டது

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

வருவாய் கோட்டாட்சியர்,
தென்காசி.